**2026 ஜூலை மாதம் 24– ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர் : 147/2023**

MCOP No.: 147/2023 – ஐஸ்வர்யா PW2 24.07.2026

த/பெ.கருப்பையா

**சாட்சி அழைக்கப்பட்டு, 2 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. விபத்தில் இறந்துபோன புவனேஸ்வரி எனது மூத்த சகோதரி என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இறந்துபோன புவனேஸ்வரி, நான், புவனேஸ்வரியின் கணவர் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் புவனேஸ்வரியின் கணவர் வண்டியை ஓட்ட, மூன்று பேரும் அமர்ந்து பயணம் செய்தோம் என்றால் சரிதான். விபத்தில் வேறு வாகனம் ஈடுபடவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது சகோதரியின் கணவருக்கு வாகனத்தை ஓட்டுவதற்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல.

2. எனது தாயார் முதல் விசாரணையில் தாக்கல் செய்த குற்ற அறிக்கையில் எனது அக்காவின் கணவர் அதிகமான நபர்களை ஏற்றிச்சென்றதற்காகவும், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டியதாக அவர் மீது மோட்டார் வாகன சட்டத்தின்கீழ் உள்ள பிரிவுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் எனது அக்காவின் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், வழக்கிற்காக நான் அவருக்கு உரிமம் உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது அக்காவின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தலையில் காயம் ஏற்பட்ட காரணத்தினால் இறந்துபோனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது அக்கா தலைகவசம் அணிந்து பயணம் செய்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணமான எனது அக்காவின் கணவரை இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து எனது அக்காவின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.07.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.24 16:59:44 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
24.07.2026